Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 26.12.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 26.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

வீரச் சிறுவர் தினமான இன்று புதுடெல்லியில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமரின் பால் புரஸ்கார் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 20 பேருக்கு, விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

தேசிய வளர்ச்சியில் இளைஞர்களை மையப்படுத்தும் வகையில் இளைஞர்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்த, புதிய கொள்கைகளை அரசு உருவாக்கி வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மாநில அரசுகளின் தலைமைச் செயலர்களுக்கு இடையே புதுடெல்லியில் இன்று தொடங்கியுள்ள, 3 நாள் தேசிய மாநாட்டிற்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமை ஏற்கிறார்.

புதுச்சேரியில், இன்று நடைபெற்ற வீர் பால் திவஸ் விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு, பரிசுகளை வழங்கினார்.

முர்மு-வீரச் செயல்

வீரச் சிறுவர் தினமான இன்று புதுடெல்லியில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமரின் பால் புரஸ்கார் விருதுக்கு

தேர்ந்தெடுக்கப்பட்ட 20 பேருக்கு, விருதுகளை வழங்கி சிறப்பித்தார். 18 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து, வீரச் செயல், புதுமையாக்கம், அறிவியல்-தொழில் நுட்பம், கலை, விளையாட்டு ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் சிறார்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. சீக்கிய குரு கோவிந்த் சிங்கின் புதல்வர்களான, சாகிப்ஜாதா ஜொராவர் சிங் மற்றும் ஃபடே சிங்கின் இணையற்ற துணிச்சலையும், தியாகத்தையும் நினைவு கூர்ந்து போற்றும் வகையில், ஆண்டுதோறும் வீரச் சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது. தாகத்திற்குத் தண்ணீர் எடுப்பதற்காக ஆற்றுக்குச் சென்ற தந்தையை, முதலையிடம் இருந்து, வீரத்துடன் காப்பாற்றிய, 9 வயது ஆக்ரா சிறுவன் அஜய் ராய், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணம் பெற உதவும் வகையில், 2 புதுமை படைப்புகளை உருவாக்கிய மகாராஷ்டிரச் சிறுமி அனுப்பிரியா மகரிஷி ஆகியோர், இதில் அடங்குவர். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு விழாவில் பேசுகையில், விருது பெறுவோர் மட்டுமின்றி, இந்திய சிறார்கள் அனைவருக்கும் உணர்வூக்கம் அளிப்பதாக இந்த விருதுகள் அமையும் என்றார்.

*மோடி -1 (12)*

தேசிய வளர்ச்சியில் இளைஞர்களை மையப்படுத்தும் வகையில் இளைஞர்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்த, புதிய கொள்கைகளை அரசு உருவாக்கி வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். புதுடெல்லி பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்ற, வீரச் சிறுவர் தின விழாவில் கலந்து கொண்டு, ராஷ்டிரிய பால் புரஸ்கார் விருது பெற்ற சிறார்களுடன் கலந்துரையாடினார். முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில் புதிய Gen Z மற்றும் Gen Alpha தலைமுறையினர் தான் நாட்டை வழிநடத்துவார்கள் என்றும் விளையாட்டு முதல் விண்வெளி வரை எல்லாத் துறைகளிலும், அரசின் ஒவ்வொரு முயற்சிகளும் இளைஞர்களை மையமாக கொண்டதாகவே இருக்கும் என்றும் அவர் கூறினார். பிரதமரின் உரை குறித்து, கூடுதல் விவரங்கள்................

(வாய்ஸ்)

*மோடி-2 (14)*

(வாய்ஸ்)

இளைஞர்களிடையே தலைமைப் பண்பை மேம்படுத்தி புதிய வாய்ப்புக்களை வழங்கவும் இளைஞர்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும், மேரா யுவ பாரத் திட்டத்தின் கீழ், அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார். ஒவ்வொரு துறையிலும் இளைஞர்களுக்கு வாய்ப்புகள் உருவாகி வருவதாக தெரிவித்த அவர் இளைஞர்களின் திறமை மற்றும் நம்பிக்கையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இன்னும் பல வாய்ப்புக்களை வழங்க அரசு உறுதி பூண்டுள்ளதாக கூறினார்..

முன்னேறிய இந்தியாவிற்கு வலுவான அடித்தளம் அமைக்கும் வகையில், தேசிய கல்விக் கொள்கையில் முக்கிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதை பிரதமர் சுட்டிக் காட்டினார். தேசியக் கல்விக் கொள்கையில், 21-ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ற கற்றல் முறைகள் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் அணுகுமுறைக்கு முக்கியத் துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

*மோடி-3 (12)*

*சீக்கிய குரு கோவிந்த் சிங்கின் புதல்வர்கள், மத அடிப்படை வாதம் மற்றும் தீவிரவாதத்தின் அடித்தளமே ஆட்டம் காணும் வகையில், முகலாயர்களின் கொடூரத்தை துணிச்சலுடன் எதிர்த்து நின்றதை பிரதமர் திரு நரேந்திர மோடி, வீரச் சிறுவர் தின விழா உரையில், சுட்டிக் காட்டினார். கடந்த 4 ஆண்டுகளாக வீரச் சிறுவர் தினம் கொண்டாடப்படுவதால் இவர்களின் தியாகத்தை இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ள முடிந்திருப்பதாக அவர் தெரிவித்தார். குரு கோவிந்த் சிங் ஜி, அவரது புதல்வர்களின் தியாகமும், துணிச்சலும் ஒவ்வொரு இந்தியருக்கும் தொடர்ந்து வலுவளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

காலனியாதிக்க மனோபாவத்தில் இருந்து நிரந்தரமாக விடுபட இந்தியா தீர்மானித்து இருப்பதாகவும், அவ்வாறு விடுபடும் போக்கில், மொழி ரீதியிலான நாட்டின் பன்முகத் தன்மை, முக்கிய வலுவாக மேம்பட்டு வருவதாகவும் பிரதமர் கூறினார்.

மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி இவ்விழாவில் பேசுகையில், இளம் தலைமுறையினர், நாட்டிற்கே முதலிடம் என்பதை வாழ்க்கையின் லட்சியமாக கொள்ள வேண்டும் என்றார்.

*மோடி-தலைமைச் செயலர்*

மாநில அரசுகளின் தலைமைச் செயலர்களுக்கு இடையே புதுடெல்லியில் இன்று தொடங்கியுள்ள, 3 நாள் தேசிய மாநாட்டிற்கு, நாளையும் நாளை மறுநாளும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமை ஏற்கிறார். வளர்ச்சிக்கான தேசிய முன் உரிமைகள் பற்றிய, முறையான நீடித்த பேச்சு வார்த்தைகள் மூலம், மத்திய மாநில ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில், மற்றொரு முக்கிய மைல் கல்லாக இம்மாநாடு அமைந்துள்ளது. ஒத்துழைப்பான கூட்டாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு இணங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில், பாலர் கல்வி, பள்ளிக் கல்வி, உயர்கல்வி, திறன்மேம்பாடு, விளையாட்டு ஆகிய 5 முக்கியத் துறைகளில், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் பின்பற்றும் சிறந்த நடைமுறைகளின் பகிர்வு அடிப்படையில், முன்னேறிய இந்தியாவிற்கான மனித வளத்தை கட்டமைத்தல் என்பது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு, வளர்ச்சிக்கான பொது செயல் திட்டம் இறுதி செய்யப்படுகிறது. மாநில தலைமைச் செயலர்களுக்கு இடையிலான தேசிய மாநாடு கடந்த 2022 முதல் ஆண்டு தோறும் நடத்தப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

*சிவராஜ்-ஜி ராம் ஜி*

விக்சித் பாரத்-ஜி ராம் ஜி திட்டத்தின் கீழ், 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான வளர்ச்சிப்

பணிகள், கிராமப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் என. மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான் கூறி உள்ளார். இத்திட்டத்தினால் கிராமப்புற குடும்பங்களுக்கான சட்டப்பூர்வ வேலை உத்தரவாத நாட்களின் எண்ணிக்கை, 100-ல் இருந்து 125-ஆக உயர்த்தப்பட்டுள்ளதாக, இன்று புதுடெல்லியில் DD News தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் கூறினார். விண்ணப்பித்த 15 நாட்களுக்குள், வேலை வழங்கப்படாவிட்டால் கட்டாயமாக வேலையின்மை படி வழங்கவும் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஜி ராம் ஜி வேலை உத்தரவாத கூலிச் செலவு, கொள்முதல் செலவு, மற்றும் நிர்வாக செலவுகளுக்கான மொத்த நிதித் தேவை, மாநில அரசுகளின் பங்களிப்பு உட்பட ஆண்டுக்கு 1 லட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதில் மத்திய அரசின் பங்களிப்பு சுமார் 95 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

*வீர்பால்-ரங்கசாமி*

மத்திய அரசின் வழிகாட்டுதலின் படி, புதுச்சேரியில், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை சார்பில் இன்று நடைபெற்ற வீர்பால் திவஸ் விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற, காப்பக குழந்தைகள், அங்கன்வாடி குழந்தைகள், பள்ளி-கல்லூரி மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். புதுடெல்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்ற வீர்பால் திவஸ் விழா, புதுச்சேரி விழாவில் நேரடியாக ஒளிபரப்பப் பட்டது. கதிர்காமம் இந்திராகாந்தி அரசு மருத்துவக் கல்லூரிக் கலை அரங்கில் நடைபெற்ற இவ்விழாவில், சட்டமன்ற உறுப்பினர் திரு கே எஸ் பி ரமேஷ், தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், நலத் துறைச் செயலர் திரு சவுத்ரி முகமது யாசின், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் திரு ரங்கசாமி இவ்விழாவில் பேசுகையில், குழந்தைகள் பயமின்றி தைரியம் மற்றும் தன்னம்பிக்கையுடன் வாழ

இத்தகைய விழாக்கள் ஊக்கமளிக்கும் என்றார். வீரக் கதைகளை குழந்தைகள் தெரிந்து கொள்வதால், சமூகத்திற்கும் நன்மை ஏற்படும் என்று அவர் தெரிவித்தார். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களையும் இத்தகைய விழாக்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். முதலமைச்சரின் உரையில் இருந்து ஒரு பகுதி............... (வாய்ஸ்-ரங்கசாமி)

*சுனாமி-ரங்கசாமி*

புதுச்சேரியில், 21-ஆம் ஆண்டு சுனாமி நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது. கடற்கரை சாலை காந்தி சிலைக்கு பின்னல் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு கடலில் பால் ஊற்றியும், மலர் தூவியும், சுனாமி தாக்குதலில் உயிர் இழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.உயிர் இழந்தவர்களின் படங்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், மீன்வளத்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பிரகாஷ் குமார், திரு பாஸ்கர் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

*வானிலை*

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுச்சேரி காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இப்பகுதிகளில் நாளை வறண்ட வானிலையே நிலவும் என்றும், ஓரிரு இடங்களில், அதிகாலை வேளையில், லேசான பனி மூட்டம் காணப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளின் ஓரிரு இடங்களில். இரவு அல்லது அதிகாலை வேளையில் உறைபனிக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, ஈரோட்டில் 32.8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. சமவெளிப் பகுதிகளை பொறுத்த வரை, மதுரையில், 18.4 டிகிரி, மற்றும், மலைப் பகுதிகளைப்

பொறுத்த வரை ஊட்டியில், 4.2 டிகிரி செல்சியஸ் குறைந்த பட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட்*

மகளிர் கிரிக்கெட்டில், இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையிலான 3-ஆவது 20-ஓவர் போட்டி திருவனந்தபுரத்தில் இன்று மாலை நடைபெற உள்ளது. 5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 2-க்கு பூஜ்யம் என்ற கணக்கில், முன்னிலையில் உள்ளது. கடந்த ஞாயிற்றுக் கிழமை விசாகப்பட்டிணத்தில் நடைபெற்ற முதலாவது போட்டியில் இந்தியா, 8 விக்கெட் வித்தியாசத்திலும், கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற 2-ஆவது போட்டியில், 7 விக்கெட் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றது.

*உண்மை அறிதல்*

தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் சமூக ஊடக செயலிகளுக்கு, புதிய தொலை தொடர்பு விதிமுறைகளை, மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக சமூக ஊடகங்களில் வெளியாகி வரும் கட்டுரையை, மத்திய அரசு நிராகரித்து உள்ளது. இத்தகைய விதிமுறைகள் எதுவும் அமலாகவில்லை என்று, பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை அறியும் பிரிவு தெரிவித்துள்ளது. பொது மக்கள் எந்த ஒரு தகவலையும் பகிர்ந்து கொள்ளும் முன்பாக, அதிகாரப் பூர்வ ஆதாரங்களுடன் சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

*அமித் ஷா தீவிரவாதம்* (13)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுடெல்லியில், தேசிய புலனாய்வு முகமையின் தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டை தொடக்கி வைத்து, தீவிரவாத எதிர்ப்பு பணிகளில் சிறப்பாக பங்களித்த ஊழியர்களை கவுரவித்தார். பின்னர் சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில், தீவிரவாதமே மனித குலத்தின் மிகப் பெரிய எதிரி என்றும், தீவிரவாதத்திற்கு எதிராக அனைவரும் இணைந்து போராடுதல் அவசியம் என்றும் கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு

தீவிரவாதத்தை கடுமையான முறையில் ஒடுக்கி வருவதாக அவர் தெரிவித்தார். தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில், அனைத்து அரசு துறைகளும் ஒருங்கிணைந்து முழுமையாக ஈடுபடுவதை உறுதிப்படுத்தும் வகையிலான இம்மாநாட்டில் மத்திய-மாநில அரசுகளின் பல்வேறு துறைகள் மற்றும் ஏஜன்சிகளும் கலந்து கொண்டு தீவிரவாதத்திற்கு எதிராக திறம்பட்ட உத்திகளை உருவாக்குவது குறித்தும் விவாதிக்கின்றன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

வீரச் சிறுவர் தினமான இன்று புதுடெல்லியில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமரின் பால் புரஸ்கார் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 20 பேருக்கு, விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

தேசிய வளர்ச்சியில் இளைஞர்களை மையப்படுத்தும் வகையில் இளைஞர்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்த, புதிய கொள்கைகளை அரசு உருவாக்கி வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மாநில அரசுகளின் தலைமைச் செயலர்களுக்கு இடையே புதுடெல்லியில் இன்று தொடங்கியுள்ள, 3 நாள் தேசிய மாநாட்டிற்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமை ஏற்கிறார்.

புதுச்சேரியில், இன்று நடைபெற்ற வீர் பால் திவஸ் விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு, பரிசுகளை வழங்கினார்.

இத்துடன் இந்த செய்திஅறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------